RNI-NO: TNTAM/2021/83936

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025







சிவகங்கை | மலர்-4 | இதழ்- 136 | மே.22, 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘தமிழகத்தின் நிதி உரிமைக்காக டெல்லி செல்கிறேன்’ இபிஎஸ்-க்கு முதல்வர் ஸ்டாலின் பதிலடி



சென்னை: மே.22-

தமிழ்நாட்டுக்கான நியாயமான நிதி உரிமையை நிதிஆயோக் கூட்டத்தில் வெளிப்படுத்த 24ம் தேதி டெல்லி செல்கிறேன். பாஜகவுடன் கூட்டணி கிடையாது என்று அடித்துச் சொன்ன நாக்கின் ஈரம் காய்வதற்குள், ஒரே ரெய்டில் புலிகேசியாக மாறி வெள்ளைக்கொடி ஏந்தச் சென்ற, பழனிசாமி என்னைப் பார்த்து வெள்ளைக் கொடி ஏந்தியதாகப் பேச நா கூசவில்லையா?, என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தனது சமூகவலைதளப் பக்கத்தில், “தமிழ்நாட்டுக்கான நியாயமான நிதி உரிமையை நிதிஆயோக் கூட்டத்தில் வெளிப்படுத்த 24ம் தேதி டெல்லி செல்கிறேன். சசிகலா முதல் அமித்ஷா வரை ஆள் மாறினாலும், டேபிளுக்கு அடியில் காலைப் பிடிக்கும் பழக்கம் மாறாத எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு இதனைக் கண்டு ஏன் வலிக்கிறது?“பாஜகவுடன் கூட்டணி கிடையாது” என்று அடித்துச் சொன்ன நாக்கின் ஈரம் காய்வதற்குள், ஒரே ரெய்டில் ‘புலிகேசி’யாக மாறி ‘வெள்ளைக்கொடி ஏந்தச் சென்ற’ பழனிசாமி என்னைப் பார்த்து வெள்ளைக் கொடி ஏந்தியதாகப் பேச நா கூசவில்லையா?

இந்த ஸ்டாலினின் கை கருப்பு சிவப்புக் கழகக் கொடியை ஏந்தும் கை. பேரறிஞரால் தூக்கிவிடப்பட்ட கை. கருணாநிதியின் கரம் பற்றி நடந்த கை. எந்நாளும் உரிமைக் கொடியைத்தான் ஏந்துவேன், ஊர்ந்து போகமாட்டேன். இன்றைக்குக் கூட, தமிழ்நாட்டின் உரிமைக்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளேன். கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பேன், தமிழ்நாட்டுக்கான நிதியைப் போராடிப் பெறுவேன்,” என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## முக்கிய அறிவிப்பு

ஆப்ரேசன் செந்தூர்,

இந்திய பாதுகாப்பு படையினர் தேடி கொன்டு இருக்கும், தலை மறைவாக இருக்கும், பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடல் மார்க்காக இந்தியாவிற்குள் நுழைவதற்கு நிறையா வாய்ப்பு இருக்கின்றது,

இதன் காரனமாக கடல் மீனவர்கள் மற்றும் கடல் ஓர கிராம மக்கள், மற்றும் துறை முகங்கள் யாரேனும் சந்தேகம் படும் விதமாக இருந்தால், தகவல் தெரிவிக்கவும்.

NIA Headquarters, New Delhi
Contact Details
Control Room : 011-24360464
Whats App No. : 8585931100
Mob. No. : 9654447345
FAX : 011-24368801
Email : info.nia[at]gov[dot]in
Postal Address :CGO Complex, Lodhi Road, New Delhi-110003.

NIA Hyderabad
Contact Details
Control Room : 040-29882370-71
FAX : 040-27764499
Mob. No : 9493799357
Email : info.hyd.nia[at]gov[dot]in
Postal Address :Survey No. 41/14, Khanamet, Madhapur, (Hi-Tech City - JNTU Road), Hyderabad (T.S), PIN Code : 500085.

NIA Guwahati
Contact Details
Control Room : 0361-2230200
FAX : 0361-2230282
Email : info.guw.nia[at]gov[dot]in
Postal Address :Nazirakhat, PO/PS - Sonapur - 782402, District - Kamrup (Metropolitan), Assam

NIA Kochi
Contact Details
Control Room : 0484-2349344
FAX : 0484-2314044
Mob. No. : 9497715294
Email : info.koc.nia[at]gov[dot]in
Postal Address : NATIONAL INVESTIGATION AGENCY, BUILDING NO.872/C, HMT-MEDICAL COLLEGE ROAD, KALAMASSERY, KOCHI, KERALA-683503.

NIA Lucknow
Contact Details
Control Room : 0522-2974725
FAX : 0522-2974726
Email : info.luc.nia[at]gov[dot]in
Postal Address : Sector 7/26, Gomti Nagar Extension, Lucknow, Uttar Pradesh - 226002.

NIA Mumbai
Contact Details
Control Room : 022-23550650
FAX : 022-23542525
Mob. No. : 7588707129
Mob. No. : 7588707129.
Telegram No. : 7588707129.
Email : info.mum.nia[at]gov[dot]in
Postal Address : 7th Floor, Cumballa Hill, MTNL Telephone Exchange Building, Peddar Road, Mumbai, Maharashtra-400026.

NIA Kolkata
Contact Details
Control Room : 033-23356736
FAX : 033-23356738
Mob. No. : 08336926666
Email : info.kol.nia[at]gov[dot]in
Postal Address : NBCC Square, 15th Floor, New Town, Rajarhat, Action Area-III, Distt: North 24 Parganas, Kolkata - 700135 West Bengal.

NIA Raipur
Contact Details
Control Room : 0771-2972535, 2972836
FAX : 0771-2972535
Mob. No. : 09425521773
Email : info.raipur.nia[at]gov[dot]in
Postal Address : Plot No. 11/A, Sector-24, Jhanjh, Atal Nagar, Nava Raipur - 492018 (Chhattisgarh).

NIA Jammu
Contact Details
Control Room : 0191-2476270
FAX : 0191-2476271
Email : infojammu.nia[at]gov[dot]in
Postal Address : Lane No. 3, Aadarsh Enclave, Opposite Bank of Maharashtra, Railway Road, Trikuta Nagar, Jammu, Jammu and Kashmir, Pin Code - 180 012.

NIA Chandigarh
Contact Details
Control Room : 0172-2682901, 0172-2682515
FAX : 0172-2682900
Whats App No. : 7743002947.
Telegram No. : 7743002947.
Email : info-chd.nia[at]gov[dot]in
Postal Address : Community Center, Model Jail, Sector - 51, Chandigarh (UT), PIN - 160043

NIA Ranchi
Contact Details
Control Room : 0651-2443309
Mob. No. : 9142277696
Email : info.ranchi.nia[at]gov[dot]in
Postal Address : E-306, Type - E, Sector - 2, HEC Colony, Dhurva, Ranchi - 834004

NIA Chennai
Contact Details
Control Room : 044- 26615100
Mob. No. : 94999 45100
FAX : 044-26453500
Email : info-che.nia[at]gov[dot]in
Postal Address : No. 10 Miller's Road, Purasaiwakkam, Chennai - 600010, Tamil Nadu

NIA Imphal
Contact Details
Control Room : 0385-2415135
Mobile : 69093-66178
Tel/Fax : 0385-2454031
Whats App No. : 6909366178
Telegram No. : 6909366178
Email : info.imphal.nia[at]gov[dot]in
Postal Address : G -1, Type VI, Officers Colony Lamphel, Imphal West - 795004

NIA Bengaluru
Contact Details
Control Room : 080-29510900.
Fax : 08022380100.
Email : info.blr.nia[at]gov[dot]in
Postal Address : 8th Floor Vishweshwaraiah Kendriya Bhawan, Domlur, Bengaluru, Karnataka-560071

NIA Patna
Contact Details
Control Room : 0612-2280102.
Email : info-patna.nia[at]gov[dot]in
Postal Address : House No.251, Patliputra Colony, Ward No. 22-B, Reserve Circle-247-B,Patna, Bihar, Pin-800013

NIA Bhubaneshwar
Contact Details
Control Room : 0674-2912081.
Mobile : NIL.
Fax : NIL.
Email : info.bbsr.nia[at]gov[dot]in
Postal Address : Regional Telecom Training Centre (BSNL), Vani Vihar (Near Tarini Pitha), VSS Nagar, Bhubaneswar, Odisha-751010

NIA Jaipur
Contact Details
Control Room : 0141-2991701.
Email : info-jpr.nia[at]gov[dot]in
Postal Address : 1st Floor, TE BSNL Office, Sector-05, Vidhyadhar Nagar, Jaipur (Rajasthan) - 302039.

NIA Bhopal
Contact Details
Mobile : 07552994016.
Mobile : 07552994016.
Email : info-bhopal.nia[at]gov[dot]in
Postal Address : 3rd Floor, Old CID Building, Jahangirabad, Bhopal (M.P) Pin - 462008.

NIA Ahmedabad
Contact Details
Control Room : 079-29918004.
Email : info-amd.nia[at]gov[dot]in
Postal Address : Ground Floor of RTTC, Jagatpur Building, SG Highway, Ahmedabad - 380054.

## 5 வகையான போக்குவரத்து விதிமீறலுக்கு மட்டுமே அபராதம்: சென்னை காவல் ஆணையர் உத்தரவு



சென்னை: மே.22-

ஐந்து வகையான விதிமீறலுக்கு மட்டுமே அபராதம் விதிக்க வேண்டும், என போக்குவரத்து போலீஸாருக்கு சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் போக்குவரத்து விதிமீறல்களைக் கட்டுப்படுத்த பெருநகர சென்னைப் போக்குவரத்து காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவு போலீஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், ஹெல்மெட் அணியாமல் வாகனம் ஓட்டுதல், ஓட்டுநர் உரிமம், அனுமதிக்கப்பட்ட வேகத்தைவிட அதிவேகத்தில் சாலைகளில் செல்லுதல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வாகனங்களை ஓட்டுதல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோரைக் கண்டறிந்து, அபராதம் விதிப்பது உள்ளிட்ட பல்வேறு சட்ட நடவடிக்கைகளை போலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுவோரைக் கண்டறிய போலீஸாருக்கு உதவும் வகையில், சென்னையின் முக்கியச் சாலைகள், சந்திப்புகள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு அபராதம் விதிக்கும் பணிகளிலும் போக்குவரத்து போலீஸார் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், சோதனை என்ற பெயரில், போக்குவரத்து போலீஸார் கூட்டமாக சாலையில் நின்று வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து சென்னையில் போக்குவரத்து போலீஸார், என்னென்ன குற்றங்களுக்காக அபராதம் விதிக்க வேண்டும் என்பது தொடர்பாக, பெருநகர சென்னை காவல்துறை ஆணையர் உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி,

அதிவேகமாக வாகனம் ஓட்டுவது,

`ஹெல்மெட்' அணியாமல் வாகனம் ஓட்டுவது,

நோஎன்ட்ரியில் வாகனம் ஓட்டுவது,

மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது,

இருசக்கர வாகனத்தில் இருவருக்கு மேல் பயணித்தல், ஆகிய 5 வகையான விதமீறல்களுக்கு மட்டுமே அபராதம் விதிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## கண்டலேறு அணையிலிருந்து மீண்டும் நீர் திறப்பு: தமிழக எல்லையை அடைந்தது கிருஷ்ணா நதி நீர்!



திருவள்ளூர்: மே.22-

தெலுங்கு கங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணிக்காக நிறுத்தப்பட்டிருந்த கிருஷ்ணா நதி நீர், மீண்டும் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்டு நேற்று (மே 21) காலை தமிழக எல்லையை வந்தடைந்தது.

சென்னையின் குடிநீர் தேவைக்காக, தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் ஆந்திர அரசு ஆண்டு தோறும் ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டிஎம்சி, ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டிஎம்சி என, 12 டிஎம்சி கிருஷ்ணா நதி நீரை தமிழகத்துக்கு வழங்கவேண்டும். அந்த வகையில், ஆந்திர அரசு, சென்னையின் குடிநீர் தேவைக்காக ஜனவரி முதல் ஏப்ரல் வரை வழங்கவேண்டிய கிருஷ்ணா நதி நீரை வழங்கவேண்டும் எனக் கோரி, தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள், ஆந்திர நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு கடிதம் எழுதினர்.

இதையடுத்து, சென்னைக் குடிநீருக்காக ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து, தெலுங்கு கங்கை திட்ட கால்வாய் மூலம் கிருஷ்ணா நதி நீரை கடந்த மார்ச் 24ம் தேதி ஆந்திர நீர்வளத்துறையினர் திறந்தனர். கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், 152 கி.மீ., தூரம் பயணித்து, தமிழக எல்லையான திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டுக்கு கடந்த மார்ச் 28ம் தேதி காலை வந்தடைந்தது. தொடர்ந்து, அந்த நீர், கடந்த மார்ச் 30ம் தேதி பூண்டி ஏரியை சென்றடைந்தது.

இந்நிலையில், திறக்கப்பட்டு வந்த கிருஷ்ணா நதி நீர், தெலுங்கு கங்கை கால்வாயில், ஆந்திர மாநிலம் ஸ்ரீகாளஹஸ்தியில் மதகு சீரமைப்பு பணி மேற்கொள்வதற்காக ஏப்.19ம் தேதி ஆந்திர நீர்வளத்துறையினர் நிறுத்தினர். இதனால், கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லைக்கு வருவது ஏப்.24ம் தேதி, முற்றிலுமாக நின்று போனது.

இச்சூழலில், தெலுங்குகங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணி முடிவடைந்ததையடுத்து, மே 5ம் தேதி மீண்டும் சென்னை குடிநீருக்காக கிருஷ்ணா நதி நீரை கண்டலேறு அணையில் இருந்து ஆந்திர நீர்வளத்துறையினர் , திறந்தனர். தொடக்கத்தில் விநாடிக்கு 500 கன அடி என, திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, கடந்த 19ம் தேதி விநாடிக்கு 2,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், 4 அல்லது 5 நாட்களில் தமிழக எல்லையான தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டுக்கு வரவேண்டிய நிலையில், 10 நாட்கள் தாமதமாக இன்று காலை 7 மணிக்கு வந்தடைந்தது. அப்போது, தமிழக எல்லைக்கு வந்த கிருஷ்ணா நதி நீரின் அளவு விநாடிக்கு 50 கன அடியாக இருந்தது என, கூறும் தமிழக நீர்வள ஆதாரத் துறையினர், இன்று இரவுக்குள் 25 கி.மீ., தூரம் பயணித்து பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா நதி நீர் சென்றடையும் என, தெரிவித்துள்ளனர்.

மேலும், கண்டலேறு அணையில் இருந்து, மீண்டும் திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், தமிழக எல்லைக்கு 10 நாட்கள் தாமதமாக வந்தடைந்ததற்கு தெலுங்கு கங்கை கால்வாயில், ஸ்ரீகாளஹஸ்தி முதல் சத்தியவேடு வரையான பகுதிகளில், ஆந்திர விவசாயிகள் சட்ட விரோதமாக மின்மோட்டார்கள் மூலம் கிருஷ்ணா நதி நீரை உறிஞ்சியதுதான் காரணம் என கூறப்படுகிறது.

## 25% இட ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கைக்கு இடையூறு: நடவடிக்கைக்கு சிபிஎம் வலியுறுத்தல்



சென்னை: மே.22-

“தமிழகம் முழுவதும் சுமார் 1.75 லட்சம் மாணவர்கள் கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி விண்ணப்பம் செய்துள்ளனர். சில தனியார் பள்ளிகளில் மாணவர்கள் விண்ணப்பம் செய்வதற்கான இணைய தளத்தை முடக்கி வைத்திருக்கின்றனர். எனவே, தமிழக அரசு, மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு நிதியினை வழங்கி RTE சட்டப்படி முழுமையாக மாணவர் சேர்க்கைக்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: “கட்டாய கல்வி உரிமை சட்டம் 2009ன் படி ஏழை, எளிய மாணவர்களுக்கான 25% இட ஒதுக்கீட்டுக்கு தமிழக அரசு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு தர வேண்டிய தொகை நிலுவையாக உள்ளது என்கிற காரணத்தை முன்னிறுத்தி RTEபடி 25% இட ஒதுக்கீடு கொடுக்க முடியாது என தனியார் பள்ளிகள் தெரிவித்துள்ளன. இதில் தமிழக அரசு மற்றும் பள்ளிக்கல்வித்துறை உடனடியாக தலையிட்டு கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி 25 சதவிகித இட ஒதுக்கீட்டை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

சர்வ சிக்ஷா அபியான் (SSA) திட்டத்தின் கீழ் தமிழக அரசுக்கு தரவேண்டிய ரூபாய் 2000 கோடிக்கு மேலான நிதி பங்கீட்டை மத்திய அரசு கொடுக்க மறுத்து வருகிறது. இதனால் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக தமிழகத்தில் 7 லட்சம் மாணவர்களுக்கு மேலாக கிடைக்க வேண்டிய கல்வி வாய்ப்பு பறிபோகும் நிலை இருக்கிறது.

இவ்வாண்டு தமிழகம் முழுவதும் சுமார் 1.75 லட்சம் மாணவர்கள் கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி விண்ணப்பம் செய்துள்ளனர். சில தனியார் பள்ளிகளில் மாணவர்கள் விண்ணப்பம் செய்வதற்கான இணைய தளத்தை முடக்கி வைத்திருக்கின்றனர். எனவே, தமிழக அரசு, மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு நிதியினை வழங்கி RTE சட்டப்படி முழுமையாக மாணவர் சேர்க்கைக்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். தனியார் பள்ளி நிர்வாகங்களும் 75 சதவிகிதம் மாணவர்களிடம் கட்டணத்தை வசூலிக்கும் நிலையில் அரசு நிதி தாமதமாவதை காரணமாக காட்டி 25 சதவிகித மாணவர் சேர்க்கையை மறுப்பது நியாயமல்ல என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

மத்திய அரசு கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தையே முடமாக்கும் வகையில் இச்சட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிதியை மாநிலங்களுக்கு வழங்காமல் தனியார் பள்ளி நிர்வாகங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தி மாணவர்களின் கல்வி வாய்ப்பை மறுக்கும் வகையில் நடந்து கொள்வது வன்மையான கண்டனத்துக்குரியது. மத்திய அரசிடமிருந்து நிதியை பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ளும் அதேநேரத்தில், தனியார் கல்வி நிறுவனங்களில் ஸிஜிணி சட்டப்படி மாணவர்கள் சேர்க்கைக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில், தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்று அவர் கூறியுள்ளார்.



# குன்னூரில் குடிபோதையில் கார் ஓட்டி சென்று டிரான்ஸ்பார்மர் மீது மோதி கவிழ்ந்தது போதையில் இருந்த மூன்று பேர் தப்பி ஓட்டம்

குன்னூர், மே.22-

நீலகிரி மாவட்டம் குன்னூர் ஓட்டுப்பற்றை பகுதியில் நேற்று இரவு குடிபோதையில் மின்னல் வேகத்தில் காரை இயக்கியதில் அங்கிருந்த மின்சார டிரான்ஸ்பர்மர்ரில் மோதி கார் கவிழ்ந்தது

காரில் பயணம் செய்த மூவர் சிறு காயங்களுடன் உயிர்த்தப்பினர் குன்னூர் அருகே ஒட்டு பட்டரை பகுதியில் மது போதையில் காரை வேகமாக ஓட்டி வந்து டிரான்ஸ்பார்மர் கம்பத்தில் மோதி தலைகீழாக கவிழ்ந்தது. இதில் மூன்று பேர் மது போதையில் இருந்தவர்கள் சிறு காயங் களுடன் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். அங்கு வந்த டவுன்போலீசார் காரை கைப்பற்றி விசாரணை மேற்கொ ண்டு வருகின்றனர். மேலும் உடனே அப்பகுதிக்கு வந்த மின்சார துறையினர் மின்சாரத்தை துண்டித்தனர், இரவு நேரம் என்பதால் மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது விபத்து சம்பவம் குறித்து குன்னூர் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மதுரை மாவட்டம் நெடுஞ்சாலை துறை சார்பாக முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு பணிகள் திட்டத்தின் கீழ் ரூ.22.10 கோடி மதிப்பீட்டில்

# மேலூர் அழகர்கோவில் சாலை விரிவாக்க பணிகள் குறித்து அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.மூர்த்தி ஆகியோர் நேரில் ஆய்வு

மதுரை, மே.22-

மதுரை, அழகர் கோவில் அருகே இரணியம் பகுதியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நெடுஞ் சாலை துறை சார்பாக முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு பணிகள் திட்டத்தின் கீழ் ரூ.22.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேலூர் அழகர்கோவில் சாலை விரிவாக்க பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.



மதுரையில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில் அமைந்துள்ள அழகர் கோவில் பகுதி முக்கிய இடமாக விளங்குகிறது. இப்பகுதியில் உள்ள மேலூர் அழகர் கோவில் நெடுஞ்சாலை பிரதான சாலையாக திகழ்கிறது. திருக்கோவிலுக்கு செல்லும் பக்தர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் இந்த சாலையை முக்கிய சாலையாக பயன்படுத்தி வருகின்றனர். அதன்படி இச்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை தவிர்த்திடும் நோக்கில் இரு வழிச்சாலையாக உள்ள 3.14 கி.மீ நீளம் சாலையை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்திட திட்டமிடப்பட் டது. நெடுஞ் சாலைத்துறை சார்பாக முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு பணிகள் திட்டத்தின் கீழ் ரூ.22.10 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. இச்சாலை பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். பணிகளை விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, அரசு செயலாளர் (நெடுஞ் சாலைகள் துறை) திரு.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.செள. சங்கீதா, இ.ஆ.ப., அவர்கள், சேடப்பட்டி திரு.மு.மணிமாறன் அவர்கள், நெடுஞ் சாலைத்துறை தலைமை பொறியாளர் திரு.ஆர். சத்யபிரகாஷ் அவர்கள், கண்காணிப்பு பொறியாளர் திரு.ஆர்.கே.ரமேஷ் அவர்கள், கோட்ட பொறியாளர்கள் திருமதி. மோகன காந்தி அவர்கள், திரு. பிரசன்னா வெங்கடேஷ் அவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.



# 1,008 பேர் தீப்பந்தங்களை ஏந்தி நிற்க 200க்கும் மேற்பட்ட பக்தர்கள் முள்படுக்கையில் படுத்து நேர்த்திக்கடன்

## நாட்டார்மங்கலம் கோயிலில் 8 ஆண்டுகளுக்கு பிறகு திருவிழா கோலாகலம்

பாடாலூர், மே.22-

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா நாட்டார்மங்கலத்தில் பிரசித்தி பெற்ற செல்லியம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் 8 ஆண்டுகளுக்கு பிறகு திருவிழா காப்புகட்டுதலுடன் கடந்த மே 13ம் தேதி துவங்கியது.

இதைதொடர்ந்து தினந்தோறும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா நடந்தது. விழாவின் முக்கிய நிகழ்வாக முள்படுகளம் நிகழ்ச்சி இன்று அதிகாலை நடந்தது. இதையொட்டி அதிகாலை 4 மணிக்கு மாரியம்மன் கோயில் முன் முத்து பல்லக்கு படுகளம் ரதத்தில் அம்மன் எழுந்தருளினார்.

பின்னர் சுவாமியை ஊர்வலமாக ஏரிக்கரையில் உள்ள மேனட்டாய் கோயிலுக்கு பக்தர்கள் சுமந்து வந்தனர். இதையடுத்து குடியழைப்பு நிகழ்ச்சியுடன் 1008 தீப்பந்தங்கள் ஏந்தியவாறு சாவடி அருகே மண்டி பந்தலுக்கு அம்மனை பக்தர்கள் தூக்கி வந்தனர். பின்னர் 1008 தீப்பந்தங்களை பக்தர்கள் ஏந்தி நின்ற நிலையில் 200க்கும் மேற்பட்ட பக்தர்கள் முள்படுக்கையில் படுத்து நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.

முன்படுகள நிகழ்ச்சி நாட்டார்மங்கலம், கூத்தனூர், ஈச்சங்காடு, மருதடி, செட்டிகுளம், ஆலத்தூர்கேட், நாரணமங்கலம், இரூர், திருவளக்குறிச்சி, பாடாலூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த திரளான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு நடத்தினர். இதற்கான ஏற்பாடுகளை அனைத்தும் நாட்டார்மங்கலம் கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம்

ராமநாதபுரம், மே.22-

ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்திய நாட்டின் தொழிலாளி வர்க்கம். மத்திய, மாநில அரசு ஊழியர், பொதுத்துறை ஊழியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம், குழந்தைகளின் கல்வி. ஆரோக்கியம். வேலை வாய்ப்பு. நியாயமான ஊதியம், வேலை நேரம். பாதுகாப்பான பணி சூழல். கண்ணியமான வாழ்வாதாரம். தொழிலாளர்களுக்கு அதிகாரமளிக்கும் பொருளாதார சட்டம், சமூக அநீதி சுரண்டலிலிருந்து பாதுகாப்பு. மத நல்லிணக்கம், சகோதரத்துவம் பேணிடுதல் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க !தேசம் காக்கமே. 20.5.25 அன்று அகில இந்திய அளவிலான மாவட்ட தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் ஒருபகுதியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத்தலைவர் விஜயராமலிங்கம் தலைமை தாங்கினார்.




மாவட்ட துணை தலைவர்கள் வேலுச்சாமி, பாலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பின்பு கீழ்காணும் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். ஒய்வூதிய ஒழுங்காற்று முறை ஆணையத்தை (PFRDA) களைத்திடு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அங்கன்வாடி, சத்துணவு, வருவாய் கிராம உதவியாளர். எம்.ஆர்.பி. செவிலியர், ஊர்ப்புற நூலகர்களை நிரந்தர ஊழியர்களாக்கி காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

8வது ஊதியக்குழுவை விரைவில் அமுல்படுத்து சமவேலைக்கு சம ஊதியம் உறுதி படுத்த வேண்டும்.

தொகுப்பூதியம், மதிப்பூதியம். அவுட் சோர்சிங், காண்ட்ராக்ட், பணிநியமனங்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.

சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்தி ஆணை வழங்க வேண்டும்.


குறைந்தபட்ச ஊதியம் 26.000 வழங்க வேண்டும். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை விலைவாசி குறியீட்டுடன் வழக்கமான திருத்தத்துடன் குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட வேண்டும்

மத்திய, மாநில அரசின் காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும் மற்றும் காலாவதியான பணியிடங்களை புதுப்பித்து பணி வழங்க வேண்டும்

8 மணிநேர வேலை நேரத்தை உறுதி செய். போராடிப்பெற்ற தொழிலாளர் உரிமைகளை பறிக்காதே தொழிலாளர் நலச்சட்டங்களை பாதுகாத்து பலப்படுத்த வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். இதில் மாவட்ட இணை செயலா ளர்கள் முத்துசாமி சரத்மோகன் மெய்யசக்தி, தணிக்கையாளர் பாண்டி, மாநில செயற்குழு உறுப்பினர் ஜெனிஸ்டர், கருவூலத்துறை மாவட்ட. செயலாளர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியாக வட்டகிளை நிர்வாகி சுரேஷ் நன்றி கூறினார்.

## தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரத்தில்

# சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற தென்காசி மாவட்ட பாஜக செயற்குழு உறுப்பினர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு



தென்காசி, மே.22-

தென்காசி மாவட்டம் சுரண்டையைச் சேர்ந்தவர் நீலகண்டன் (வயது 58) பிரபல தனியார் ஆம்னி பேருந்து நிறுவனத்தின் மேலாளராக பணிபுரிந்து வரும் இவர் தென்காசி மாவட்ட பாஜக செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார். இவர் கடந்த 2023ஆம் ஆண்டு பாவூர்சத்திரம் பகுதியில் தனியாக இருந்த சிறுமிக்கு பாலியல் தொந்தரவு அளித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனை சிறுமி தனது பெற்றோரிடம் கூறியதையடுத்துபெற்றோர், ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையம் மற்றும் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தனர். மேலும் நடவடிக்கை எடுக்க கோரி மதுரை உயர் நீதிமன்ற கிளையிலும் மனு தாக்கல் செய்தனர். அவரது மனுவின் மீது விசாரணை மேற்கொண்ட நீதிபதி உடனடியாக நீலகண்டன் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டார். நீதிபதி உத்தரவின் பேரில் ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் நீலகண்டன் மீது மூன்று பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர். நீதிமன்ற உத்தரவுப்படி வழக்கு பதிவு செய்த போலீசார் பாஜக பிரமுகர்கள் நீலகண்டனை வலை வீசி தேடி வருகிறார்கள். இந்த சம்பவம் தென்காசி மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழ்நாடு முழுவதும் குவாரிகளை ஆய்வு செய்ய கனிமவளத்துறை உத்தரவு



சென்னை, மே.22-

தமிழ்நாடு முழுவதும் குவாரிகளை ஆய்வு செய்ய கனிமவளத்துறை உத்தரவிட்டுள்ளது. சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே கல்குவாரியில் நேற்று பாறைகள் சரிந்து 5 பேர் உயிரிழந்தனர். விபத்தை அடுத்து மாநிலம் முழுவதும் உள்ள கல்குவாரிகளை ஆய்வு செய்ய உத்தரவு. பாதுகாப்பு நடைமுறைகளை குவாரிகள் முறையாக பின்பற்றுகின்றனவா? என ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டது.




# நுழைவுக்கட்டணம் அதிகரிப்பால் மலர் கண்காட்சியை காணாமல் தவிர்க்கும் உள்ளூர் பொதுமக்கள் கட்டணத்தை குறைக்க கோரிக்கை

ஊட்டி, மே.22-

ஊட்டி தாவரவியல் பூங்காவில் நுழைவு கட்டணம் அதிகமாக உள்ளதால், உள்ளூர் மக்கள் மலர் கண்காட்சியை காண செல்லாமல் தவிர்க்கின்றனர். ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நுழைவு கட்டணமாக கடந்த ஆண்டு வரை பெரியவர்களுக்கு ரூ.50ம், சிறுவர்களுக்கு ரூ.30ம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கடந்த ஆண்டு மலர் கண்காட்சியின் போது, திடீரென கட்டணம் உயர்த்தப்பட்டது. ரூ.150ம், சிறியவர் களுக்கு ரூ.75ம் நுழைவு கட்டமாக வசூலிக்கப்பட்டது.

இதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், பெரியவர்களுக்கு சற்று கட்டணம் குறைத்து ரூ.125 ஆக குறைக்கப்பட்டது. மலர் கண்காட்சி முடிந்த பின்னரும் தொடர்ந்து, கடந்த ஓராண்டு காலமாக நுழைவு கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.125ம் சிறியவர்களுக்கு ரூ.75ம் வசூலிக்கப்படுகிறது.

இந்த கட்டணத்தை குறைக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், பூங்கா நிர்வாகம் கட்டணத்தை குறைக்கவில்லை. தற்போதும் இதே கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனால், பெரும்பாலான சுற்றுலா பயணிகள் மலர் கண்காட்சியை காண தாவரவியல் பூங்கா நுழைவு வாயில் வரை வருகின்றனர். அங்கு கட்டணத்தை கேட்டவுடன் திரும்பி செல்கின்றனர்.

குறிப்பாக, கிராமப்புறங்களில் இருந்து வரும் பெரும்பாலான சுற்றுலா பயணிகள் கட்டணத்தை கேட்டவுடன், திரும்பி சென்று விடுகின்றனர். மேலும், மலர் கண்காட்சியை காண வரும் உள்ளூர் மக்களும் இதே கட்டணத்தை செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், உள்ளூர் மக்களும் கடும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

மேலும், கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது அறிந்த பல உள்ளூர் மக்கள் இம்முறையும் பலரும் மலர் கண்காட்சி காண வரவில்லை. ஆண்டு தோறும் தாவரவியல் பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் மூலம் பல கோடி தோட்டக்கலைத்துறைக்கு வருவாய் கிடைக்கிறது.

இருந்த போதிலும், கட்டணம் உயர்த்தப்பட்டு வசூலிக்கப்படுவது சுற்றுலா பயணிகளை விட நீலகிரி மாவட்டத்தில் வாழும் உள்ளூர் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மலர் கண்காட்சியை காண உள்ளூர் மக்களுக்கு கட்டணம் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. எனவே, உள்ளூர் மக்கள் மலர் கண்காட்சியை குறைந்த கட்டணத்தில் கண்டு செல்ல ஏற்ற வகையில் கட்டணங்களை குறைக்க தோட்டக்கலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# பிராமல் ஃபைனான்ஸ் தங்களது சேவைகளை தமிழ்நாட்டில் விரிவுப்படுத்துகிறது 14,835 வாடிக்கையாளர்களுக்கு நிதிச் சேவைகள் மேம்படுத்துகிறது

தூத்துக்குடி, மே.22-

சிறு தொழில்கள் மற்றும் தனிநபர்களுக்கு கடன்கள் வழங்கும் முன்னணி ழிஙிதிசி நிறுவனமான பிராமல் ஃபைனான்ஸ் லிமிடெட், தமிழ்நாட்டில் தங்களது சேவைகளை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. சப்கே (SubK) இம்பாக்ட் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 23 மைக்ரோஃபைனான்ஸ் கிளைகளை பெற்று, தற்போது இந்த கிளைகள் பிராமல் ஃபைனான்ஸ் நேரடி நிர்வாகத்தில் செயல்படுகின்றன. இந்த மாற்றத்தின் மூலம், இதற்கு முன் சப்கே (SubK) சேவைகளைப் பெற்ற வந்த 14,835 வாடிக்கையாளர்கள், நிறுவனத்தின் மைக்ரோஃ பைனான்ஸ் சேவைகளை பலப்படுத்தி, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு தேவைக்கு ஏற்ப நிதி உதவிகளை வழங்கும் திறனை மேம்படுத்தும்.

வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக அணுகும் வசதி, மேம்பட்ட சேவைகள்:

இந்தியாவின் முழுவதும், எல்லாத் தரப்பினரும் நிதிச் சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், பிராமல் ஃபைனான்ஸ் தனது நீண்டகால செயல் திட்டத்திற்கு இணக்கமானதாக இந்த இணைப்பு நடவடிக்கை அமைந்திருக்கிறது. குறிப்பாக நாட்டின் ஊரகப் பகுதிகளிலும் மற்றும் சிறு நகரங்களை உள்ளடக்கிய பிராந்தியங்களிலும், நிதிச் சேவைகளை உள்ளடக்கியதுடன் பரவலாக்குவதே பிராமல் ஃபைனான்ஸின் திட்டமாக இருந்து வருகிறது. நிதிச் சேவைகளைப் பெற இயலாமல் இருந்த பிரிவினருக்கும்



மற்றும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக பிராமல் ஃபைனான்ஸ் மேற்கொண்டு வரும் முயற்சியின் ஒரு பகுதியாக இவ்விரிவாக்கம் உள்ளது. முறையாக ஒழுங்க மைக்கப்பட்ட நிதிச் சேவைகளுக்கு, அதுவும் குறிப்பாக கிராமப்புற மற்றும் அரைநகர்ப்புறங்களில், நிதிச் சேவைகளை எளிதாகக் கிடைக்கச் செய்யும் நிறுவனத்தின் வலியுறுத்தலை பிரதிபலிக்கிறது.

பிராமல் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் மேனேஜிங் டைரக்டர் ஜெயராம் ஸ்ரீதரன் கூறியதாவது "தமிழ்நாட்டில் உள்ள சப்கே இம்பாக்ட் சொல்யூஷன்ஸ் கிளைகளின் வாங்கல் நடவடிக்கை, பாரதம் முழுவதும் நிதி சேர்க்கையை ஆழமாக்கும் எங்களது இலக்கில் ஒரு முக்கியமான படியாகும். தமிழ்நாடு எங்களுக்கான முக்கிய சந்தையாகும்; இந்த புதிய கிளைகள், மேலும் விரைவில் சேரவுள்ள கிளைகள் மூலமாக, ஆண்டு இறுதிக்குள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதே எங்களது நோக்கமாக உள்ளது. இது கிராமப்புறம் மற்றும் அரைநகர்ப்புறங்களில் எங்களது இருப்பை வலுப்படுத்தி, நம்பிக்கையுடன் கூடிய மற்றும் எளிதாக அணுகக்கூடிய நிதிச் சேவைகளை வழங்கும் வாய்ப்பை உருவாக்குகிறது. உள்ளூர் புரிதலும், டிஜிட்டல் தளங்களின் திறனும் எங்களுக்கிருக்கும் ஆதாரமாக, சமூகங்களை ஆற்றலூட்டுவதிலும், பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆதரவாக இருக்கவும் எங்கள் அர்ப்பணிப்பு தொடரும்"

பிராமல் ஃபைனான்ஸ், சிறு தொழில்கள், குறு தொழில்முனைவோர் மற்றும் மதிப்புவாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு எளிதாக அணுகக்கூடிய, தொழில்நுட்ப ஆதரவு கொண்ட நிதிச் சேவைகள் வழங்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது.

இந்த புதிய கிளைகள் இணைக்கப்படும் செயல்முறை, சிறப்பான குழுக்களின் மூலம் கவனமாக மற்றும் தடையற்ற மாற்றத்துடன் நடைபெற்று வருகிறது"



# ராஜீவ் காந்தியின்34வது நினைவு தினத்தை முன்னிட்டு மாலை அணிவிப்பு

திண்டுக்கல், மே.22-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வ உ சி பேருந்து நிலையம் அருகே முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி 34 ஆவது நினைவுநாளை முன்னிட்டு. நகரத் தலைவர் முத்து விஜயன் தலைமையில் பழனி நகரம் மற்றும் ஒன்றிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் மகாத்மா காந்தி சிலை மற்றும் ராஜிவ்காந்தி உருவப்படத்திற்குமாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நடைபெற்ற விழாவில் தீவிரவாதத்தை வேரறுக்கவும், ராகுல்காந்தியை பிரதமர் ஆக்கவும் உறுதிமொழி எடுத்துத் கொண்டனர். இந்நிகழ்வில். மண்டல தலைவர் வீரமணி. எஸ்சி எஸ்டி பிரிவு குப்புசாமி. சுந்தர். ராமநாத கிருஷ்ணன். சுப்பிரமணி. சின்னத்துரை. செல்லம். சண்முகம். பானு.முகமது அலி. கட்டப்பன்.கதிரேசன். ராஜேந்திரன். நேரு. சாய்ரா பானு. உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளுக்கு கலந்து கொண்டனர்

# சுற்றுலா பயணிகளை கவரும் பல வகை ஆர்கிட் மலர்கள்

ஊட்டி, மே.22-

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வைக்கப்பட்டுள்ள ஆர்கிட் மலர்கள், லில்லியம் மலர்கள் வாடாமல் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது.ஆண்டுதோறும் கோடைகாலமான மே மாதம் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம்.



இந்த ஆண்டு 127வது மலர் காட்சி கடந்த 15ம் தேதி துவங்கியது. இந்த மலர் கண்காட்சியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார். இந்த மலர் கண்காட்சியில் இரண்டு லட்சம் மலர்களால் ஆன பண்ணையை அரசர் கால அரண்மனை அலங்காரம், அரண்மனை நுழைவு வாயில் ஆகிய மலர் அலங்காரம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர கரிகாலன் கல்லணை, ராஜ சிம்மாசனம், ஊஞ்சல், சிப்பாய்கள், யானை, அன்ன பறவை, ரதம் உள்ளிட்ட பல்வேறு அலங்கா ரங்கள் மொத்தம் 7 லட்சம் கார்னேசன் மலர்கள், ரோஜா, கிராசந்திமம் உள்ளிட்ட மலர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

மலர் கண்காட்சியை முன்னிட்டு வண்ண வண்ண விளக்குகளால் பூங்கா அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேலும், மாடங்களில் 35 ஆயிரம் தொட்டிகளில் பல்வேறு வகையான வண்ண மலர் தொட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதில் 200 லில்லியம் மலர்கள், 100க்கும் மேற்பட்ட தொட்டிகளில் ஆர்க்கிட் மலர்கள் ஆகியவைகள் வைக்கப்பட்டுள்ளன.

இதில், ஆர்கிட் மலர்கள் வாடாமல் அழகாக காட்சியளிக்கிறது. அதே போல லில்லியம் மலர்களும் பூத்துக்குலுங்குகின்றன. இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்துச்செல்கின்றனர். குறிப்பாக, அரிதாக காணப்படும் ஆர்கிட் மலர்கள் முன் நின்று புகைப்படம் எடுத்து சுற்றுலா பயணிகள் செல்கின்றனர்.

### தமிழ்நாட்டிலேயே அதிகபட்சமாக சேலம் மாவட்டம் 13 உழவர் சந்தைகளை கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது

# நாள் ஒன்றுக்கு 55 டன் வரையிலான காய்கறிகளை விற்பனை செய்து தமிழ்நாட்டிலேயே தாதகாப்பட்டி உழவர் சந்தை 5 வது இடத்தில் உள்ளது

### அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற தாதகாப்பட்டி உழவர் சந்தைக்கான வெள்ளி விழாவில் தகவல்

சேலம், மே.22-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சேலம், தாதகாப்பட்டி உழவர் சந்தை தொடங்கி வைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா. இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் உழவர் சந்தைக்கான வெள்ளிவிழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மேயர் திரு.ஆ. இராமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா. இராஜேந்திரன் அவர்கள் பேசியதாவது:



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் விவசாயிகளின் நலன் காத்திடும் வகையில் வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கையினைச் செயல்படுத்தி உள்ளார்கள். அதன்படி கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு உழவர் நலன் காக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், நடப்பு நிதியாண்டில் ரூ.45,661 கோடி என அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.,

விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக பொதுமக்களிடம் விற்பனை செய்ய திட்டமிட்ட அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட உன்னத திட்டம் உழவர் சந்தை திட்டமாகும். சேலம் மாவட்டத்தில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் சூரமங்கலம், அம்மாப்பேட்டை மற்றும் ஆத்தூர் உழவர் சந்தைகள் துவக்கி வைக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த ஆண்டு வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. தாதகாப்பட்டி உழவர்சந்தையானது 19.05.2000 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டு தற்போது 25 ஆண்டுகள் சிறப்பாக செயல்பட்டு 26வது ஆண்டில் அடியெடுத்து வைத்து வெள்ளிவிழா கொண்டாடப்படுகிறது.

தற்பொழுது சேலம் மாவட்டத்தில் 13 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டிலேயே சேலம் மாவட்டம் அதிக உழவர் சந்தைகளை கொண்டுள்ளது. காய்கறிகள் அதிக வரத்து மற்றும் விற்பனை செய்யும் உழவர் சந்தைகளில் சூரமங்கலம் உழவர் சந்தை தமிழகத்திலேயே 4 வது இடத்திலும், தாதகாப்பட்டி உழவர் சந்தை தமிழகத்திலேயே 5 வது இடத்தில் உள்ளது. 90 கடைகளுடன் தொடங்கப்பட்ட தாதகாப்பட்டி உழவர்சந்தை கூடுதலாக 80 கடைகள் கட்டப்பட்டு தற்போது 170 கடைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதுவரை 650 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு சராசரியாக 17 முதல் 195 வரை விவசாயிகள் தங்கள் காய்கறிகளை விற்பனை செய்ய வருகை புரிகின்றனர். தினசரி 45 முதல் 55 டன் வரையிலான காய்கறிகள் விற்பனையாகிறது. மேலும், 2024ஆம் ஆண்டு மேச்சேரி மற்றும் வாழப்பாடி வட்டாரங்களில் புதிய உழவர் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராமங்களில் இருந்து விவசாயிகள் விளைப்பொருட்களை உழவர் சந்தைக்கு பேருந்துகளில் எடுத்து வர சுமைகட்டணம் முற்றிலும் இலவசமாக உள்ளது.

காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளை கண்டறிந்து, அவர்களது விளைபொருட்களை உழவர் சந்தையில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அனைத்து உழவர் சந்தைகளுக்கும் எடைத்த ராசுகள், மின் இணைப்பு, குளிர்பதன கிடங்கு மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல் தரமான மலை காய்கறிகளும் மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களும் நுகர்வோருக்கு குறைந்த விலையில் கிடைக்க ஆங்கில காய்கறி கடைகளும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

விவசாய பெருங்குடி மக்களின் நலனில் அக்கரையுடனும், உழவர்களை போற்றும் அரசாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் பேசினார்கள்.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் இன்றையதினம் 21 பயனாளிகளுக்கு ரூ.6.30 இலட்சம் மதிப்பிலான உழவர் சந்தை அடையாள அட்டை, தார்ப்பாய், தார்பாலின், டிராக்டர், பவர் வீடர் மற்றும் வேளாண் விளை பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர் மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 19.05.2000 ஆம் ஆண்டு உழவர் சந்தை தொடங்கப்பட்ட போது உழவர் சந்தை அடையாள அட்டை பெற்ற விவசாயிகளை பாராட்டி பொன்னாடை அணிவித்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா. இராஜேந்திரன் அவர்கள் கௌரவித்தார்கள். முன்னதாக மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் தாதகாப்பட்டி உழவர் சந்தையில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் உழவர் சந்தையின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.சி.சிங்காரம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) திருமதி ஆர்.பிரேமா, சேலம் விற்பனைக்குழு முதுநிலை செயலாளர் திரு.இரா.சுரேஷ்பாபு, கொண்டலாம்பட்டி உதவி ஆணையர் திரு.வேடியப்பன், மண்டலக்குழுத்தலைவர் திரு.அசோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி ஜி.கனிமொழி கணேசன், சமூக ஆர்வலர் திரு.இரா ஜேந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



# ஈரோடு ஜவுளி சந்தையில் பள்ளி சீருடைகள் விற்பனை அதிகரிப்பு

ஈரோடு, மே.22-

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் கனி மார்க்கெட் ஜவுளி வணிக வளாகம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான மணிக்கூண்டு ரோடு, டி.வி.எஸ். வீதி, ஈஸ்வரன் கோயில் வீதி, என்.எம்.எஸ்.காம்பவுண்ட், காமராஜர் வீதி, பிருந்தா வீதி உள்ளிட்ட பகுதிகளில் ஜவுளி மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இங்கு வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு தொடங்கி, செவ்வாய்க்கிழமை இரவு வரை ஜவுளி சந்தை நடைபெற்று வருகிறது. தவிர, ஜவுளி குடோன்களிலும் ஜவுளி விற்பனை நடைபெறுவது வழக்கம்.

தென்னிந்திய அளவில் பிரசித்தி பெற்ற ஈரோடு ஜவுளி சந்தைக்கு அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய வெளி மாநிலங்களில் இருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான வியாபாரிகள் வந்து, ஜவுளி கொள்முதல் செய்து செல்வார்கள்.

இந்த நிலையில், இந்த வார ஜவுளி சந்தை நேற்று முன்தினம் இரவு தொடங்கி நேற்று இரவு வரை நடைபெற்றது. தற்போது கோடைக்காலத்தையொட்டி, காட்டன் ரக துணிகள் விற்பனை அதிக அளவில் நடைபெற்றது. தவிர, இந்த ஆண்டு பள்ளி சீருடைகள் நிறம், டிசைன் போன்றவற்றின் மாற்றத்தால், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் பள்ளி சீருடை ஜவுளி ரகங்களை அதிக அளவில் வாங்கி சென்றனர்.

அதேபோல, பள்ளி திறக்க இன்னும் 12 நாட்களே உள்ள நிலையில், பொதுமக்களும் தங்கள் குழந்தைகளுக்கு அதிக அளவில் சீருடைகள் வாங்கி சென்றனர். மேலும், கோடைக்காலமும் தொடர்வதால் காட்டன் ரக துணிகள் விற்பனையும் ஓரளவு நடைபெற்றது.

இதனால், இந்தவார ஜவுளி சந்தையில் சில்லரை விற்பனை சுமார் 40% அளவில் நடைபெற்றது.

அதே நேரம், வெளியூர் வியாபாரிகள் வருகை இல்லாததால் மொத்த வியாபாரம் சுமார் 20% வரை மட்டுமே நடைபெற்றதாக ஜவுளி வியாபாரிகள் தெரிவித்தனர்.



# உதகை மலர் கண்காட்சி: 6 நாட்களில் 1.13 லட்சம் பேர் கண்டு ரசித்தனர்

நீலகிரி, மே.22-

உதகை கண்காட்சியை 6 நாட்களில் 1.13 லட்சம் பேர் கண்டு ரசித்துள்ளனர். காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை மலர் கண்காட்சியை காண அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. நீலகிரி கோடை விடுமுறையையொட்டி நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களில் சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். சுற்றுலா பயணிகளை உற்சாகப்படுத்தும் வகையில் தமிழக அரசின் தோட்டக்கலை துறை சார்பில் மலர் கண்காட்சி ஆண்டு 127 வது மலர் கண்காட்சியை 15ம் தேதி தொடங்கியது. இந்த கண்காட்சியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

கண்காட்சியில், பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் 40 ஆயிரம் வண்ண மலர் மாடங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், மலர் கண்காட்சியில் பல்வேறு வகையிலான மலர்கள் இடம்பெற்றுள்ளன. இதை சுற்றுலா பயணிகள் கண்டுகளித்து வருகின்றனர். இந்நிலையில், உதகை மலர் கண்காட்சியை கடந்த 6 நாட்களில் 1.13 லட்சம் பேர் கண்டு ரசித்துள்ளதாக தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது. காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை மலர் கண்காட்சியை காண பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# 47 பதவிகளுக்கு 615 காலி பணியிடங்களுக்கான அறிவிப்பை வெளியிட்டது TNPSC!!

சென்னை, மே.22-

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகளுக்கு) தேர்வு அட்டவணையை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNP-SC) வெளியிட்டுள்ளது. இது குறித்து வெளியான அறிக்கையில்,

“ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்), 2025.

உதவிப் பொறியாளர் (அமைப்பியல் / மின்னியல் / வேளாண் பொறியியல்) உள்ளிட்ட 47பதவிகளுக்கான 615 காலிப்பணியிடங்களை நிரப்ப, ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்). க்கான அறிவிக்கை, தேர்வாணையத்தின் ஆண்டுத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி இன்று (21.05.2025) வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வர்கள் 27.05.2025 முதல் 25.06.2025 வரை இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். தேர்வர்கள் தேர்வுக்கட்டணத்தை UPI மூலமாகவும் செலுத்தலாம். கணினி வழித் தேர்வு 04.08.2025 முதல் 10.08.2025 வரை நடைபெறும்.

தொடர்ச்சியாக 11 வது முறையாக தேர்வாணையத்தின் ஆண்டுத்திட்டத்தில் குறிப்பிட்ட தேதியில் தேர்விற்கான அறிவிக்கை தேர்வாணையத்தால் தவறாமல் வெளியிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வுகள் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) 2024ம் ஆண்டு அறிவிக்கையில், இரண்டு நிதியாண்டுகளுக்கான 1236 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. அதாவது, ஒரு நிதியாண்டிற்கு சராசரியாக 618 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

2025ம் ஆண்டு ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) மூலம், ஒரு நிதியாண்டிற்கு (2025 -2026) 615 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 2025ம் ஆண்டு அறிவிக்கையில் வெளியிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை, அரசுத் துறை மற்றும் நிறுவனங்களிடமிருந்து அதிகரித்து பெறப்படும் பட்சத்தில் கலந்தாய்விற்கு முன்பாக மேலும் அதிகரிக்கப்படும், எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது”என்று கூறப்பட்டுள்ளது.

# கோடை விடுமுறையில் குதூகலம் தரங்கம்பாடி கடற்கரையில் அலைமோதும் சுற்றுலா பயணிகள்

தரங்கம்பாடி, மே.22-

கோடை விடுமுறையையொட்டி தரங்கம்பாடி கடற்கரையில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.தஞ்சையை ஆண்ட ரகுநாதநாயக்கர் மன்னரிடம், டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டின் செய்து கொண்ட வணிக ஒப்பந்தத்தின் படி, 1620ம் ஆண்டு டேனீஷ் கப்பல் படை தலைவர் ஒவ் கிட்டி என்பவர் தரங்கம்பாடி கடற்கரை அருகில் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான டேனீஷ் கோட்டையை கட்டினார். மேலும் கோட்டையை நான்கு பக்கமும் அகழி, அதன் வெளியே உயர்ந்த மதில் சுவரினையும் கட்டினார்.



வரலாற்று சிறப்பு வாய்ந்த இந்த கோட்டையை காண ஆண்டு முழுவதும் சுற்றுலா பயணிகள் வருவது வழக்கம். தற்போது கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், இந்த கோட்டையை கண்டு ரசிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். தரங்கம்பாடி கடற்கரை, டேனிஷ் கோட்டை, அகழி, அருங்காட்சியகம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் சுற்றுலா பயணிகள் காணப்படுகின்றனர்.

கடற்கரை ஓரம் மதில் சுவரில் அலைகள் மோதி, உயரமாய் சிதறி விழும் கடலில் நீரில் சுற்றுலா பயணிகள் நனைந்து மகிழ்கின்றனர். தற்போது ஒரு பகுதியில் டேனிஷ் கோட்டையில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

பணிகள் நடைபெறாத பகுதிகளில் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்டனர். இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடையாமல் டேனிஷ் கோட்டை கண்டு ரசித்து மகிழ்ந்தனர். மேலும் பராமரிப்பு பணிகளை விரைவுபடுத்தி விரைவில் டேனிஷ் கோட்டையை புதுப்பொலிவு பெற செய்ய வேண்டும் என்று சுற்றுலா பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# மதுரை மாவட்டம்: இளைஞர்களின் தனித்திறனை வெளிக்கொணர்ந்து சாதனை படைக்க உறுதுணையாக விளங்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி

தமிழ்நாடு மாநிலத்தை விளையாட்டுத் துறையில் முதன்மை மாநிலமாக மேம்படுத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மனிதவள மேம்பாட்டின் முக்கிய அங்கமாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை திகழ்கிறது. தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்களது திறன்களை வெளிப்படுத்தி உலகளவிலும், தேசிய அளவிலும் பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திடும் வகையில் விளையாட்டுத்துறையின் மீது கூடுதல் கவனம் செலுத்தி திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, மதுரை மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு









ஆணையம் சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதுரை டாக்டர்.எம்.ஜி.ஆர் விளையாட்டரங்கில் செயற்கையிழை தடகள மைதானம் மற்றும் இயற்கைபுல் கால்பந்து மைதானம் மறுசீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.8.25 கோடி மான்யம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயற்கையிழை தடகள மைதானம் மற்றும் இயற்கைபுல் கால்பந்து மைதானம் மறுசீரமைத்தல் பணிகள் முடிவுற்றதைத் தொடர்ந்து 05.05.2025அன்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மதுரை டாக்டர்.எம்.ஜி.ஆர் விளையாட்டரங்கில் செயற்கையிழை தடகள மைதானத்தில் பயிற்சி மேற்கொள்வதன் மூலம் பல்வேறு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற வழிவகுக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் உயரிய தரத்திலான விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம் STAR (SPORTS TALENT ADVANCEMENT & RECOGNITION) அகாடமி உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் “SDAT ஸ்டார் அகாடமி மதுரை மாவட்டத்தில் பளுதூக்குதல் விளையாட்டில் மாவட்ட விளையாட்டு பயிற்சி மையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்கான மாவட்ட அளவிலான கோடைகால பயிற்சி முகாம் 25.04.2025 முதல் 15.05.2025 வரை 21 நாட்கள் டாக்டர்.எம்.ஜி.ஆர் விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. கோடைகால பயிற்சி முகாமில் தடகளம், கால்பந்து, கையுந்துபந்து, வளைகோல்பந்து, கைப்பந்து ஆகிய விளையாட்டு போட்டிகளுக்கான பயிற்சி இலவசமாக நடத்தப்பட்டது. நாள்தோறும் பயிற்சி முகாமில் 207 மாணவர்களும், 112 மாணவியர்களும் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டசபை தொகுதிகளிலும் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் வடக்கு சட்டமன்ற தொகுதி தவிர்த்து 9 தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது.

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியில் 6 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ.3.00 கோடி திட்ட மதிப்பீட்டில் சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. அதன்படி, முதற்கட்டமாக மதுரை மாவட்டத்தில் சோழவந்தான் சட்டமன்ற தொகுதியில் சின்ன இலந்தைகுளம் கிராமத்தில் சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கு 02.11.2023அன்று அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமான பணிகள் நிறைவுற்றதைத் தொடர்ந்து, 04.03.2025அன்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது. இந்த சிறு விளையாட்டரங்கத்தில் 200 மீ தடகள மைதானம், வாலிபால், கால்பந்து, பார்வையாளர் கேலரி, உடைமாற்றும் அறை, கூடைப்பந்து, கபாடி மற்றும் கோகோ ஆகிய விளையாட்டு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலூர் வட்டம் கருத்தப்புலியன்பட்டி கிராமம் மற்றும் உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீமானூத்து கிராமத்தில் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு 07.05.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மதுரை மாவட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்கள் மட்டுமல்லாது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விளையாட்டு வீரர்கள் விளையாட்டு தொடர்பான காயங்களிலிருந்து மறுவாழ்வு பெறவும் தொழில்நுட்ப முறையில் தங்கள் உடற்தகுதியை மீட்டெடுக்கவும் பேருதவியாக இருக்கும் என்பதையும் இதன் மூலம் ஒலிம்பிக்கில் நமது வீரர்கள் பங்கு பெற்று அதிகம் பதக்கங்கள் பெற உதவியாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு மதுரை டாக்டர். எம்.ஜி.ஆர் விளையாட்டரங்கில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் ரூ5.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 18.02.2024 அன்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன்விழாவை சிறப்பித்திடும் வகையில், அனைத்து ஊராட்சிகளுக்கும் டாக்டர்.கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் உள்ள 420 கிராம ஊராட்சிகளுக்கும் 546 எண்ணிக்கையிலான விளையாட்டு உபகரணங்களை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 18.02.2024 அன்று வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் போறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பாக கொண்டாடும் வகையில் மாணவ, மாணவியருக்கான பேரறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் நடத்திட மானியம் ரூ.3000/ ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் போட்டிகள் நடத்திட மானியமாக ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், முதன்முறையாக இந்தாண்டு முதல் இப்போட்டிகளில் வெற்றி பெறும் முதல் மூன்று இடம் பெறுபவர்களுக்கு முதல்பரிசு ரூ.5000/ம், இரண்டாம் பரிசாசு ரூ.3000/ம், மூன்றாம் பரிசாக ரூ.2000/ம், 4 முதல் 10ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.250/ பரிசுத்தொகை காசோலையாக வழங்கப்படுகிறது. இப்போட்டியில் 2023ஆம் ஆண்டில் 154 மாணவ, மாணவர்களும், 2024ஆம் ஆண்டில் 113 மாணவ, மாணவர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக மதுரை மாவட்டத்தில் 20242025 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளர்களுக்கு ஆகிய ஐந்து பிரிவுகளில் டாக்டர்.எம்.ஜி.ஆர் விளையாட்டரங்கில் 10.09.2024 முதல் 24.09.2024 வரை நடைபெற்றது. விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு 26,524 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தனர். இப்போட்டியில் 9,689 மாணவர்கள், 4,226 மாணவியர்கள் என மொத்தம் 13,915 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டு போட்டியில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு அரசின் மூலம் இந்த விளையாட்டுப் போட்டிக்கு மான்யமாக ரூபாய் 11,10,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் உள்ள சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 26 வகையாக விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. தேசிய அளவிலான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளுக்கான தொடக்க விழா 19.01.2024அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. மதுரை மாவட்டத்திற்கு கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு மான்யமாக ரூ.11.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மதுரை மாவட்டத்தின் சார்பாக கட்கா விளையாட்டுப் போட்டியில் 80 வீரர்கள், 80 வீராங்கனைகளும், கோகோ விளையாட்டுப் போட்டியில் 120 வீரர்கள், 120 வீராங்கனைகளும் கலந்து கொண்டார்கள்.

மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ஒலிம்பிக் அகாடமி அமைப்பதற்கு ரூ.6.00 கோடி திட்ட மதிப்பீட்டில் உடற்பயிற்சி கூடம் (GYM) உள்விளையாட்டரங்கம், கபாடி, மேசைப்பந்து உள்விளையாட்டரங்கம் மற்றும் கூடைப்பந்து, டென்னிஸ் மைதானங்கள் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், தமிழ்நாடு அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலம் செயல்படுத்தி வரும் சிறப்பான திட்டங்களின் பயனாக இளைஞர்கள் தங்களது தனித்திறனை வெளிப்படுத்தி சாதனை படைக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் என்றும் உறுதுணையாக விளங்குகின்றது.

தடகள விளையாட்டுப் பயிற்சியாளர் திரு.ஜோதி பாஸ் அவர்கள் தெரிவித்ததாவது:

எனது பெயர் திரு.ஜோதி பாஸ். நான் மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கில் தடகள விளையாட்டு பயிற்சியாளராக பணிபுரிந்து வருகிறேன். 100க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு தொடர்ந்து பயிற்சி வழங்கி வருகிறோம். இந்நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் மதுரை டாக்டர்.எம்.ஜி.ஆர் விளையாட்டரங்கில் செயற்கையிழை தடகள மைதானம் மற்றும் இயற்கைபுல் கால்பந்து மைதானம் ரூ.8.25 கோடி மதிப்பீட்டில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இது வீரர்களை உற்சாகப்படுத்தி அதிகளவில் பயிற்சி பெற்று பயனடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு



முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசிற்கு என்னுடைய சார்பாகவும், இளைஞர்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொகுப்பு**
**இ.சாலி தளபதி எம்.ஏ.,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**
**ம.கயிலைச் செல்வம், பி.இ.,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), மதுரை.**




## இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1434ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)

### மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம், மே.22-

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1434 பசலிக்கான ஜமாபந்தி 20.05.2025 தேதி முதல் 29.05.2025 தேதி வரை நடைபெறுகிறது. இராமநாதபுரம் மாவட்ட த்தில் 1434 பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) 20.05.2025 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் முதுகுளத்தூர் வடக்கு உள்வட்டத்திற்குட்பட்ட ஏழு வருவாய் கிராங்களுக்கு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் நாளான இன்று 21.05.2025 முதுகுளத்தூர் தெற்கு உள்வட்டத்தைச் சேர்ந்த சித்திரங்குடி, சோனைப்பிரியான் கோட்டை, ஏனாதி, கண்டிலான், இளஞ்செம்பூர், கீழச்சிறுபோது, மேலச்சிறுபோது மற்றும் சேந்தனேரி ஆகிய கிராமங்களுக்கு வருவாய் தீர்வாயம் நடைபெறுகிறது. இதில் மேற்கண்ட கிராமங்களின் கிராம கணக்குகளான அடங்கல், பட்டாமாறுதல்கள், உட்பிரிவு மாறுதல்கள், முதியோர் ஓய்வூதியர்கள் பதிவேடு உள்ளிட்ட கிராமக் கணக்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டு மனை ப்பட்டா, முதியோர் உதவித் தொகை, பட்டாமாறுதல் மனுக்களை பெற்றுக் கொண்டதுடன், மனுக்கள் மீது உரிய பரிசீலனை மேற்கொண்டு காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது முதுகுளத்தூர் வட்டாட்சியர் திரு.கோகுல்நாத் அவர்கள், தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலத்துறை) திரு.ஸ்ரீதரன் மாணிக்கம் அவர்கள், தனி வட்டாட்சியர் (ச.பா.தி) திருமதி. மரகத மேரி அவர்கள் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி (Offline) வாயிலாக, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில், சிவகங்கை மாவட்டம், காஞ்சிரங்கால் ஊராட்சி பகுதியில் ரூ.5 கோடி 19 இலட்சம் மதிப்பீட்டில் 50 படுக்கையுடன் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் புதிதாக கட்டப்படவுள்ள “தோழி விடுதிக்கான கட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்கள் கட்டுமானப் பணியினை தொடங்கி வைத்து, சிறப்பித்தார்.

## காட்டு யானையின் வயிற்றில் கிலோ கணக்கில் இருந்த பிளாஸ்டிக் கழிவுகள்



கோவை, மே.22-

கோவை மாவட்டம் மருதமலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த காட்டு யானையின் பிரேத பரிசோதனை தொடங்கியது. யானையின் வயிற்றில் இறந்த நிலையில் ஆண் குட்டி யானை மற்றும் கிலோ கணக்கில் இருந்த பிளாஸ்டிக் கழிவுகள் இருந்தது. 4 நாட்களாக பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி பெண் காட்டுயானை உயிரிழந்தது.






### குன்னூரில் கொட்டும் மழையில் வக்பு வாரிய சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி

## ஐக்கிய ஜமாத் மற்றும் இஸ்லாமிய கூட்டமைப்பு சார்பில் கண்டன பொதுக்கூட்டம் நடந்தது

குன்னூர், மே.22-

குன்னூரில் ஐக்கிய ஜமாத் மற்றும் இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள வக்பு சட்ட திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்திய அரசியல் கட்டமைப்பின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டித்தும் குன்னூர் விபி தெருவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஐக்கிய ஜமாத் அமைப்பின் தலைவர் முபாரக் அலி தலைமை வகிக்க,தலைமை இமாம் வசீம் அக்ரம் ஹசனி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக காங்கிரஸ் கட்சி மாநில செய்தி தொடர்பாளர் வழக்கறிஞர் ஜனாப் கலீம் அல் புகாரி, பத்திரிக்கையாளர் முகமது அல் அமீன், திமுக கொள்கை பரப்பு செயலாளர் தமிழ் பிரசன்னா ஆகியோர் ஒன்றிய அரசை கண்டித்தும் இஸ்லாமிய மக்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக பேசினர்.நிகழ்ச்சியில் மாநில சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் இரா அன்ர்கான், திமுக நகர செயலாளர் ராமசாமி, தலைமைக் கழக பேச்சாளர்கள் ஜாகிர் உசேன் மற்றும் கலீம்,குன்னூர் நகர மன்ற துணைத் தலைவர் வாசிம் ராஜா, முக்கிய நிர்வாகிகளான ரஹீம்,மன்சூர்,சாதிக் மற்றும், முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.கொட்டும் மழையில் நடைபெற்ற இந்த கண்டன பொதுக்கூட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டது. முடிவில் அக்பர் அலி நன்றி கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161